2023 மார்ச் 28]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

55—

உயிரி உரங்களுக்கு மானியம் வழங்குதல்

***21217—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்து கலவை உரங்களுக்கு மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இரசாயன உரங்கள் தவிர்த்து, இதர இடுபொருட்களான உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்களுக்கு, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் மூலமாக மானியம் ஏதும் வழங்கப்படுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

‘உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்.’

என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கேற்ப நானும் ஒரு விவசாயி என்கின்ற வகையில், உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்கள் அதிகரிக்கும்போது, மண் வளம், இயற்கை வளம், மனித சுகாதாரம் பாதுகாக்கப்படும். ஆகவே, மானியம் கூடுதலாக வழங்கவும், விவசாயிகளுக்கு உயிரி உரங்கள்

தயாரிக்கும் பயிற்சிகள் அளிக்கவும் அரசு முன்வருமா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இரசாயன உரங்களுக்கு மட்டுமே ஒன்றிய அரசின் சார்பில் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில்தான் இரசாயன உரங்கள் மானிய விலையில் விற்கப்படுகின்றன. அதேநேரத்தில் இரசாயன உரங்கள் தவிர்த்து, இதர இடுபொருட்களான உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்களுக்கு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் மூலமாக மானியம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. உயிரி உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்கள் பெரும்பான்மையாக வேளாண் துறை மூலமாக உற்பத்தி செய்யப்பட்டு, இவற்றின் விலை செலவினங்கள் மட்டும் கணக்கில் கொள்ளப்பட்டு, தமிழக அரசினால் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பாக, கூட்டுறவு நிறுவனமான துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தால் உயிரி உரமான வேப்பம் புண்ணாக்கு மற்றும் நுண்ணூட்டச் சத்து கலவை உரங்கள் தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டு, இவற்றிற்கு இந்நிறுவனத்தாராலேயே குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் இயற்கை உரத்தின் தேவையை அதிகரிக்கின்ற வகையில் இன்னும் கூடுதலான இடங்களில் அதுபோன்ற இயற்கை உரங்கள் தயாரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை உரம் தயாரிப்பதற்கு கும்மிடிப்பூண்டி பகுதியில் அதற்கான பயிற்சி மையமும், தயாரிப்பதற்குண்டான வழிவகைகளும் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

2023 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இப்போது இரசாயன உரங்கள் பயன்படுத்துவதைவிட இயற்கை உரங்கள், நுண்ணூட்டச் சத்து உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஒரு விழிப்புணர்வு விவசாயிகளிடத்திலும் நுகர்வோரிடத்திலும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, விவசாயிகளினுடைய விருப்பத்திற்கேற்ப கும்மிடிப்பூண்டி பகுதி மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் தேவைப்படுகின்ற இடங்களில் இதுபோன்ற புதிய அமைப்புகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயக் குடும்பத்திலே பிறந்ததால், பால் உற்பத்தி செய்ய வேண்டுமென்று பெரிய மாட்டுப் பண்ணை ஒன்றை நடத்திக் கொண்டிருக்கின்றேன். அதிலே, தினமும் நாளொன்றுக்கு ஐந்து டன்னுக்கு மேற்பட்ட சாணம் கிடைக்கிறது. நான், இந்தியா முழுவதிலும் ஆய்வு செய்து, எந்தெந்த மாநில அரசுகள் இதன்மூலம் உரம் தயாரிக்கின்றன என்று பார்த்தேன். ஜார்க்கண்ட் மாநிலத்தில், மாநில அரசே சாணத்தை மக்களிடத்திலிருந்து பெற்று, இயற்கை உரம் தயாரிப்பதற்கும், பிற தேவைகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். எனவே, விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் இந்த அரசு, சாணத்தை அரசே கொள்முதல் செய்யவோ அல்லது அதை மாவட்ட அளவிலே ஒவ்வொரு இடத்திலே இயற்கை உரம் தயாரிக்கின்ற ஒரு பெரிய அமைப்பை உருவாக்கித் தருவதற்கோ அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2023 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, நானும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த விவசாயிதான். ஆகவே, அவர் வைத்திருப்பதைப்போல நானும் பசுக்களை, கால்நடைகளை வளர்த்து வருகிறேன். குறிப்பாக, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைவிட, இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான ஆர்வம் விவசாயிகளிடத்திலும், நுகர்வோரிடத்திலும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர் விரும்புகின்றவகையில், இப்போது ஆங்காங்கு மாட்டுப் பண்ணைகள், ஆட்டுப் பண்ணைகள் வைத்திருப்பவர்கள் அந்தந்த உள்ளூர் பகுதிகளில், அந்த உரங்களை மதிப்புக்கூட்டு செய்து, மண் புழு உரம் போன்றவற்றை உற்பத்தி செய்து விற்கிறார்கள். ஆக, அது உள்ளூர் தேவைகளுக்கு சரியாக இருக்கிறது. இன்னும் கூடுதலாக அவர்களிடத்தில் இருக்குமேயானால் அது பற்றியும் துறை அலுவலர்களோடு கலந்து பேசி, எதிர்காலத்தில் உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியை, தண்டையார்பேட்டை இரயில்வே நிலையம் அமைந்துள்ள இருப்புப் பாதை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, எழில் நகர், நேதாஜி நகர், ஜெ.ஜெ. நகர், அம்பேத்கர் நகர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் வசிக்கின்ற மேற்குப் பகுதியில் கடந்த 40 ஆண்டுகளில் இதுவரை எந்தவொரு வங்கிச் சேவையும் இல்லை. அங்குள்ள மக்கள் வங்கிச் சேவையைப்

2023 மார்ச் 28]

பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் துறையின் வாயிலாக அங்கு ஒரு கூட்டுறவு வங்கியினை ஏற்படுத்தித் தருவாரா என்பதனை தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எபினேசர் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதை ஏற்கெனவே அவர் நிகழ்ச்சி ஒன்றில் என்னிடத்திலே சொல்லியிருந்தார். நானும், துறை சார்பில் அங்கு ஒரு வங்கியை அமைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறதா என்று ஆய்வு செய்யச் சொன்னேன். அவர்களும் நல்ல சாதகமான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வங்கிச் சேவை இல்லாத பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்களுக்குக் கடன் வழங்குவதற்காக அவர் எடுத்திருக்கின்ற அந்த முயற்சிக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். குறிப்பாக, இந்த ஆண்டு அந்த வங்கி துவங்குவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***1808—திரு. சு. ரவி:**

மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?